සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**87 | T | I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Ord. Level) Examination, 2023(2024)

සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය I, II
தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் I, II
Communication and Media Studies I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் I

**அறிவுறுத்தல்கள் :**

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
* **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
* **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**
* அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** அச்சுத் தொழில்நுட்பம் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது
(1) டச்சுக்காரரினால் ஆகும். (2) போர்த்துக்கேயரினால் ஆகும்.
(3) பிரித்தானியரினால் ஆகும். (4) சீனர்களினால் ஆகும்.

**2.** ஆளிடைத் தொடர்பாடலில் பயன்படுத்தப்படக் கூடுமான தொழில்நுட்பக் கருவிகளைக் கொண்டிருக்கும் தேர்வினைத் தெரிவுசெய்க.
(1) செய்திப் பத்திரிகைகள், தொலைநகல் இயந்திரம்
(2) மின்னஞ்சல், தொலைபேசி
(3) வானொலி, தொலைநகல் இயந்திரம்
(4) செல்பேசி, தொலைக்காட்சி

**3.** பிரிட்டிஷ் காலனித்துவப் பகுதியொன்றில் முதலாவது வானொலி ஒலிபரப்புச் சேவை ஸ்தாபிக்கப்பட்டு அதிகாரபூர்வமாக ஆரம்பித்துவைக்கப்பட்டது
(1) 20 ஆகஸ்ட் 1920 இல் ஆகும். (2) 12 ஜுன் 1924 இல் ஆகும்.
(3) 16 டிசம்பர் 1925 இல் ஆகும். (4) 05 ஒக்டோபர் 1949 இல் ஆகும்.

**4.** குழுத் தொடர்பாடல் அடிப்படையில் வரையறுக்கப்படக்கூடுமானது
(1) அச்செயன்முறையில் பங்கேற்கும் மக்கள் எண்ணிக்கையின் பேரிலாகும்.
(2) வாய்மொழித் தொடர்பாடலில் ஈடுபடும் குழுவின் ஈடுபாட்டின் பேரிலாகும்.
(3) அனைத்துத் தனியாட்களின் ஒழுங்கமைவானது ஒருவரையொருவர் எதிர்கொள்வதாக இருக்கும்.
(4) ஒரே தடவையில் குழுவினருடன் மேற்கொள்ளக்கூடிய தொடர்பாடல் தகைமையின் பேரிலாகும்.

**5.** உலகில் முதலாவது புத்தகம் எனக் கருதப்படுவது
(1) இலத்தீன் இலக்கணம் ஆகும். (2) வஜ்ர சூத்திரம் ஆகும்.
(3) இலத்தீன் பைபிள் ஆகும். (4) டச்சுப் பிரார்த்தனை நூல் ஆகும்.

**6.** செய்திப் பத்திரிகையொன்றின் செய்திப் பக்கங்கள் செம்மையாக்கம் செய்யப்படுவது
(1) பிரதம ஆசிரியரால் ஆகும். (2) உதவி ஆசிரியர்களால் ஆகும்.
(3) பிரதி (Deputy) ஆசிரியரால் ஆகும். (4) இணை ஆசிரியரால் ஆகும்.


**7.** வாய்மொழியற்ற தொடர்பாடலுடன் தொடர்புடைய தெரிவு எது?
(1) ஆடைகள், குரல், அங்க சைகை
(2) கையசைத்தல், தனியாள் இடைவெளி, கொடைச் சாசனம்
(3) குகை ஓவியங்கள், கல்வெட்டுகள், மேளச் சத்தம்
(4) ஓலைச் சுவடி, தனியாள் இடைவெளி, வரைபடம்

[பக். 2 ஐப் பார்க்க

8. செய்திப் பத்திரிகையொன்றில் எழுத்து வடிவத்துடனும் (text) காட்சியுடனும் (image) முறையே தொடர்புள்ளது எது?
(1) எழுத்துருக்கள் மற்றும் தலைப்புக்கள்
(2) வார்த்தைகள் மற்றும் கேலிச் சித்திரங்கள்
(3) வாக்கியங்கள் மற்றும் பந்திகள்
(4) புகைப்படங்கள் மற்றும் குறிப்புகள்

9. சட்டபூர்வமான எல்லைக்குள் வாழும் நபரொருவரை அழைக்கப் பயன்படும் பதம் எது?
(1) சுற்றுலாப் பயணி
(2) பிரஜை
(3) வாக்காளர்
(4) வரி கட்டுபவர்

10.



மேலே தரப்பட்ட வரைபடம் பிரதிநிதித்துவப்படுத்தி நிற்பது
(1) தனிச் சங்கிலியை ஆகும்.
(2) கொத்தணிச் சங்கிலியை ஆகும்.
(3) நிகழ்தகவுச் சங்கிலியை ஆகும்.
(4) புறணி பேசுதல் சங்கிலியை ஆகும்.

11. கணினியொன்றுடன் தொடர்புடையதாகப் பயன்படுத்த **முடியாத** அச்சு இயந்திர வகையொன்று
(1) புகைப்படப் பிரதி இயந்திரம்
(2) ரோனியோ இயந்திரம்
(3) பபிள்ஜெட் அச்சு இயந்திரம்
(4) லேசர் அச்சு இயந்திரம்

12. செய்திப் பத்திரிகையொன்றுடன் தொடர்புடைய சட்ட வழக்கொன்றின் பொறுப்பு ஏற்றுக்கொள்ளப்படுவது
(1) பிரதம ஆசிரியரால் ஆகும்.
(2) பிரதி ஆசிரியரால் ஆகும்.
(3) உதவி ஆசிரியரால் ஆகும்.
(4) செய்தி ஆசிரியரால் ஆகும்.

13. உலகக் கோப்பை கிரிக்கெட் இறுதிப் போட்டியின் நேரடி ஒளிபரப்பைப் பொது இடங்களில் அகன்ற திரைகளில் காணும் வாய்ப்புப் பார்வையாளர்களுக்கு வழங்கப்பட்டது. மேற்படி ஒழுங்கமைப்புடன் தொடர்புடைய தொடர்பாடல் வகை மற்றும் வடிவம்
(1) குழு மற்றும் கட்புலத் தொடர்பாடல்
(2) வெகுசன மற்றும் கட்புலத் தொடர்பாடல்
(3) வெகுசன மற்றும் குழுத் தொடர்பாடல்
(4) கட்புல மற்றும் ஆளிடைத் தொடர்பாடல்

14. இலங்கையில் முதலாவது தொலைக்காட்சி அலைவரிசை ஆரம்பிக்கப்பட்டது
(1) தனியாள் உரிமையாண்மையின் கீழ் ஆகும்.
(2) அரசாங்க உரிமையாண்மையின் கீழ் ஆகும்.
(3) அரசாங்கக் கூட்டுத்தாபனமென ஆகும்.
(4) அரசாங்கத்தால் பங்குகள் உரிமையாக்கப்பட்ட கம்பனியொன்றாக ஆகும்.

15. நபரொருவரால் அல்லது அமைப்பொன்றினால் இலத்திரனியல் தகவல்கள் உள்ளடங்கலாகக் கோப்புகளின் சேர்மானம் ஒன்று இணைய வசதியுடன் பேணப்படுவது
(1) கலைக் களஞ்சியம் ஆகும்.
(2) மின்னஞ்சல் ஆகும்.
(3) இலத்திரனியல் பேஜர் ஆகும்.
(4) இணையத்தளம் ஆகும்.

16. இலங்கை வானொலி அலைவரிசைகளின் ஒலிபரப்பில் தற்காலத்தில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் வானலை வகை
(1) சிற்றலை (SW)
(2) மத்திய அலை (MW)
(3) பண்பலை (FM)
(4) வீச்சுப் பண்பேற்ற அலை (AM)

17. சிங்கள மொழிச் செய்திப்பத்திரிகைகளில் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகத்தவர்களுடன் தொடர்புடைய செய்திகளைப் போதுமானளவில் **பிரசுரிக்காமலிருக்கும்** செயற்பாடானது
(1) மனித உரிமைகளுடன் தொடர்புடையது ஆகும்.
(2) குடியுரிமையுடன் தொடர்புடையது ஆகும்.
(3) இனத்துவத்துடன் தொடர்புடையது ஆகும்.
(4) அபிவிருத்திசார் சிந்தனையுடன் தொடர்புடையது ஆகும்.

**18.** மிகச் சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) ஊடகம் ஆதாயம் தரும் ஓர் வணிகமாகும்.
(2) செய்திகள் ஊடகங்கள் வழியாக முன்வைக்கப்படுகின்றன.
(3) ஊடகத் தொழில்துறை எப்போதும் போட்டித் தன்மையானது.
(4) ஊடகம் தகவல்களை விற்பனை செய்வதை அடிப்படையாகக் கொண்ட ஓர் வணிகமாகும்.

**19.** நிறைவேற்று அதிகாரி ஒருவரால் அவரது கையொப்பத்துடன் பதவி முத்திரையிடப்படுவது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைவது
(1) அது பாதுகாப்பைத் தருகின்றது என்பதாகும்.
(2) அது நம்பகத்தன்மையை உருவாக்குகின்றது என்பதாகும்.
(3) அது சட்ட வலுவை வழங்குகின்றது என்பதாகும்.
(4) அது ஏற்றுக்கொள்ளப்படுதலையும் பொறுப்புடமையையும் உறுதிப்படுத்துகிறது என்பதாகும்.

**20.** தொடர்பாடல் செயன்முறையுடன் தொடர்புடைய பல்வேறு படிநிலைகள் கீழேயுள்ள படத்தில் தரப்பட்டுள்ளன.

தொடர்பாடுபவர் ⟶ ☐ ⟶ ☐ ⟶ பெறுநர் ⟶ தாக்கம்

மேலே வெற்றிடமாகவுள்ள கூடுகளுக்குரிய படிநிலைகள் வரிசைக்கிரமமாக அமைவது
(1) செய்தி மற்றும் சமிக்ஞை
(2) செய்தி மற்றும் ஊடகம்
(3) ஊடுகடத்தி மற்றும் செய்தி
(4) செய்தி மற்றும் ஊடுகடத்தி

**21.** எளிமையான வாக்கிய அமைப்புகள், சரியான உச்சரிப்பு மற்றும் தெளிவான மொழி ஆகிய அம்சங்களை உள்ளடக்கிய செய்தியின் பண்பானது
(1) துல்லியம் ஆகும்.
(2) நடுநிலை ஆகும்.
(3) தெளிவான தன்மை ஆகும்.
(4) எளிமை ஆகும்.

**22.** செய்திப் பத்திரிகை வெளியீட்டுடன் தொடர்புடைய பல படிநிலைகள் கிழே தரப்பட்டுள்ளன.
A - செய்தி எழுதுதல்
B - மொழிச் செம்மையாக்கம்
C - செய்திகள் / விடயக் கட்டுரைகளை வகைப்படுத்தல்
D - பக்க வடிவமைப்பு
E - ஒப்பு நோக்குதல்

மேலுள்ள படிநிலைகளின் சரியான வரிசை
(1) A, B, D, C, E (2) C, A, B, E, D (3) C, A, D, B, E (4) C, A, E, D, B

**23.** அரசாங்க ஊடகத்தின் பிரதான பணி
(1) அரசாங்கத்தின் தீர்மானங்களை மக்களுக்கு எடுத்துச் சொல்லுதல் ஆகும்.
(2) அரசாங்கம் பற்றிய நேர்மறையான மற்றும் விருப்பத்திற்குரிய அபிப்பிராயத்தை உருவாக்குதல் ஆகும்.
(3) அரசாங்கக் கொள்கைகளுக்கு மக்களின் இசைவைப் பெறுதல் ஆகும்.
(4) அரசாங்கத்தினால் செயற்படுத்தப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளை வலுப்படுத்துதல் ஆகும்.

**24.** பார்வையின் தொடரறாத் தன்மைக் கோட்பாடு
(1) கண்ணுக்கும் அசையும் உருவத்திற்குமான இடைவெளியின் அடிப்படையிலானது ஆகும்.
(2) அசையும் உருவமொன்றை ஒரே நிலையிலிருந்து பார்க்கும்போது நிகழ்த்தப்பெறுவது ஆகும்.
(3) உருவத்தின் அசைவு வேகம் மற்றும் அதனைப் பார்ப்பதற்குத் தேவையான ஒளியளவு ஆகியவற்றைத் தீர்மானிப்பது ஆகும்.
(4) வேகமாக அசையும் உருவத்தின் நிலைகளுக்கிடையேயான இடைவெளியை ஒருவர் காணமுடியாமல் உள்ளபோது நிகழ்த்தப்பெறுவது ஆகும்.

**25.** வானொலி ஊடகத்தில் குறித்ததொரு விடயம் அல்லது விடயப்பரப்பு பற்றி வேறுபட்ட பார்வை நோக்குகளை முன்வைப்பதாகத் தயாரிக்கப்படும் நிகழ்ச்சி வகை எது?
(1) சஞ்சிகை நிகழ்ச்சி
(2) பல்சுவை நிகழ்ச்சி
(3) செய்தி நிகழ்ச்சி
(4) கலந்துரையாடல் நிகழ்ச்சி

பக். 4 ஐப் பார்க்க

**26.** 'பெறுநர்கள் இல்லாது ஊடகங்கள் வியாபித்திருக்க முடியாது.' இக்கூற்று அர்த்தப்படுவது
(1) ஊடகங்கள் பெறுநர்களுக்காக இயங்குகின்றன என்பதாகும்.
(2) ஊடக உள்ளடக்கத்தைப் பெறுநர்கள் தீர்மானிக்கிறார்கள் என்பதாகும்.
(3) பெறுநர்களின் நுகர்வாளர் பெறுமதி ஊடகங்களுடன் தொடர்புபட்டதல்ல என்பதாகும்.
(4) ஊடகங்களின் தேவைகளுக்கேற்றாற்போலப் பெறுநர்கள் செயற்படுகிறார்கள் என்பதாகும்.

**27.** தலைகீழ் பிரமிட்முறை அறிக்கையிடலில் தகவல்கள் முன்வைக்கப்படும் வழிமுறையானது
(1) அவற்றின் முக்கியத்துவத்தை முன்னிலைப்படுத்துகின்றது.
(2) அவற்றின் முக்கியத்துவத்தை மறைத்தடக்குகின்றது.
(3) அவற்றின் முக்கியத்துவத்தை குறைக்கின்றது.
(4) அவற்றின் முக்கியத்துவத்தை அதிகரிக்கின்றது.

**28.** தொலைக்காட்சி மெய்மை நிகழ்ச்சியொன்றின் முக்கிய அம்சம்
(1) பாரியளவில் அரங்கப் பின்னணி அமைப்புக்களைப் பயன்படுத்துதல் ஆகும்.
(2) பெறுநர்களின் எதிர்வினைகளுக்குச் சந்தர்ப்பங்களை வழங்குதல் ஆகும்.
(3) திரைச் சுவடியும் (script) தொகுப்பாக்கமும் (editing) இல்லை என்பதாகும்.
(4) பல உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் நடுவர் குழாமொன்று ஆகும்.

**29.** ஒலி வெளிப்பாட்டு முறைகளை உள்ளடக்கியிருக்கும் தெரிவினைத் தெரிவுசெய்க.
(1) குரல், மௌனம், இசை, சத்தங்கள்
(2) இசை, சமிக்ஞைகள், குறியீடுகள், குரல்
(3) சமிக்ஞைகள், இசை, மௌனம், சத்தங்கள்
(4) குறியீடுகள், மௌனம், இசை, குரல்

**30.** இப்படம் சுட்டிக்காட்டுவது
(1) உருவகப்படுத்தல் (Composition)
(2) தங்கச் சட்டம் (Golden rule)
(3) குவியப்படுத்தல் (Focusing)
(4) பிரிதிறன் (Resolution)



**31.** தகவல் குறிப்பொன்றைத் தொடர்பாடல் செய்யும்போது, நபரொருவர் கொண்டிருக்க வேண்டிய இரண்டு முக்கிய திறன்களை உள்ளடக்கியிருக்கும் தெரிவு எது?
(1) படைப்பாக்கம், பேச்சுத்திறன்
(2) தொடர்பாடல் திறன், எழுத்துத் திறன்
(3) மொழித்திறன், தொடர்பாடல் திறன்
(4) மொழித்திறன், படைப்பாக்கம்

**32.** குறித்ததொரு நிறுவனத்தின் ஆண்டறிக்கையின் 50 பிரதிகளை இலகுவாகவும் துரிதமாகவும் அச்சிடவேண்டிய தேவையிருந்தது. இதற்கு ஆகப் பொருத்தமான முறை
(1) ரோனியோ அச்சிடல்
(2) டிஜிடல் பிரதியெடுத்தல்
(3) புகைப்படப் பிரதியெடுத்தல்
(4) கணினி வெளியீட்டுச் செயலொழுங்கு

**33.** கட்புலச் சமிக்ஞைகளை இலத்திரனியல் முறையில் மீளாக்கம் செய்வதற்கான முயற்சிகளின் பேறாக
(1) கமெரா கண்டுபிடிக்கப்பட்டது.
(2) சினிமா ஊடகம் கண்டுபிடிக்கப்பட்டது.
(3) தொலைக்காட்சி ஊடகம் கண்டுபிடிக்கப்பட்டது.
(4) கணினி கண்டுபிடிக்கப்பட்டது.

**34.** பின்வரும் கூற்றுகளைக் கவனத்திற்கொள்க.
A - படச் சுருள்களைப் பயன்படுத்துவது அவசியமற்றது.
B - இரசாயன ஊடகமொன்றினால் படங்கள் பதிவு செய்யப்படுகின்றன.
C - கணினி மென்பொருளைப் பயன்படுத்தி படங்கள் இலகுவாகச் செம்மையாக்க முடியும்.
D - பதிவுசெய்யப்பட்ட படம் இலத்திரனியல் சமிக்ஞைகளாக மாற்றப்பட்டு, தரவுக் கோவையாகச் சேமிக்கப்படுகின்றது.

டிஜிடல் புகைப்படவியலுடன் தொடர்புடைய சரியான கூற்றுகளாவன
(1) A, B மற்றும் C ஆகியன மாத்திரம் ஆகும்.
(2) A, B மற்றும் D ஆகியன மாத்திரம் ஆகும்.
(3) A, C மற்றும் D ஆகியன மாத்திரம் ஆகும்.
(4) B, C மற்றும் D ஆகியன மாத்திரம் ஆகும்.

[ Downloaded from Past Papers Wiki - Most Extensive Wikipedia of Past Papers! ]

**35.** மரபுரீதியான தொடர்பாடல் பயன்பாட்டைக் **கொண்டிராத** தெரிவு
(1) வெற்றிலை வழங்குதல், மங்கல வாழ்த்து, பொம்மலாட்டம், பறையொலி
(2) தீ எழுப்புதல், பொம்மலாட்டம், கவி பாடுதல், கூத்து
(3) இலைகுழைகளைத் தொங்கவிடுதல், நாட்டார் கதைகள், தீ எழுப்புதல், கூக்குரலிடல்
(4) சடங்குகள், கவி பாடுதல், சுவரொட்டி, மங்கல நிகழ்வுகளில் போட்டிக்குக் கவி பாடுதல்

**36.** கணினியொன்றைப் பயன்படுத்துவதனால் தகவல் முன்வைக்கப்பட முடியுமாவது
(1) ஊடாடுகைப் பலகை மற்றும் பல்லூடக எறிவை வழியாகும்.
(2) வழுக்கி எறிவை மற்றும் பல்லூடக எறிவை வழியாகும்.
(3) தோற்றுருப்பெருக்கி (epidiascope) மற்றும் ஊடாடுகைப் பலகை வழியாகும்.
(4) தோற்றுருப்பெருக்கி மற்றும் மேந்தலை எறிவை வழியாகும்.

**37.** சிறந்த பெண் பாத்திரமேற்ற நடிகராக விருதுபெற்ற நடிகையை திரைப்பட விழாவின் இறுதியில் சூழ்ந்து கொண்ட ஒரு குழாத்தினரின் கருத்துக்கள் கீழே தரப்பட்டுள்ளன.
A - “உங்கள் நடிப்பு மிகச் சிறப்பானது.”
B - “நீங்கள் தெரிவு செய்தே பாத்திரங்களை ஏற்பதை நான் பார்க்கிறேன்.”
C - “உங்களது சமீபத்தைய திரைப்படத்தினை நான் இப்போதுவரை பார்க்கக் கிடைக்கவில்லை.”
மேற்படி கூற்றுகளுடன் மிகப் பொருத்தமாக இணையும் பெறுநர் வகை வரிசைக்கிரமமாக அமைவது
(1) செயற்படு பெறுநர், செயற்படாத பெறுநர், செயற்படாத பெறுநர்
(2) செயற்படு பெறுநர், செயற்படு பெறுநர், செயற்படாத பெறுநர்
(3) செயற்படாத பெறுநர், செயற்படாத பெறுநர், செயற்படு பெறுநர்
(4) செயற்படாத பெறுநர், செயற்படு பெறுநர், செயற்படாத பெறுநர்

**38.** இணையம்வழி வெளியிடப்படும் செய்திப் பத்திரிகைகள்
(1) பாரம்பரிய ஊடகத்தைச் சேரும்.
(2) நவீன ஊடகத்தைச் சேரும்.
(3) வெகுசன ஊடகத்தைச் சேரும்.
(4) புதிய ஊடகத்தைச் சேரும்.

**39.** 1978 அரசியலமைப்பின் 14 (I) (a) உறுப்புரை வழியாக பிரஜைகளின் எந்த உரிமை பாதுகாக்கப்படுகின்றது?
(1) தகவல் பெறுவதற்கும் வெளியிடுவதற்குமான உரிமை
(2) அபிப்பிராயமொன்றைக் கொண்டிருக்கவும் வெளியிடுவதற்குமான உரிமை
(3) பேச்சு, வெளியீடு உட்பட கருத்து வெளியீட்டுக்கான உரிமை
(4) ஒன்றுகூடல், தகவல் வெளியிடவும் பெறவுமான உரிமை

**40.** குறித்ததொரு சொக்கலேட்டை வாங்கும்போது கவர்ச்சிகரமான வளையல் ஒன்று இலவசமாக வழங்கப்படுமென தொலைக்காட்சி விளம்பரமொன்றில் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த விளம்பரத்தைப் பார்த்த பாலா வளையலைப் பெறுவதற்காகச் சொக்கலேட்டை வாங்கித் தருமாறு தாயைக் கேட்டார். மேற்படி நிகழ்வுடன் தொடர்புடைய தொடர்பாடல் வடிவத்தையும் செயற்பாட்டையும் சுட்டிக்காட்டும் சரியான தேர்வினைத் தெரிவுசெய்க.
(1) கட்புலம் - தூண்டல் என்பதாகும்.
(2) செவிப்புலம் - தகவலளித்தல் என்பதாகும்.
(3) வாய்மொழி - சமூகமயமாதல் என்பதாகும்.
(4) வாய்மொழியற்றது - பொழுதுபோக்கு என்பதாகும்.

* *

PAST PAPERS WIKI

WWW.PastPapers.WiKi

[ Downloaded from Past Papers Wiki - Most Extensive Wikipedia of Past Papers! ]

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**87 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Ord. Level) Examination, 2023(2024)

සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය I, II
தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் I, II
Communication and Media Studies I, II

## தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் II

* **முதலாம்** வினாவையும் வேறு எவையேனும் **நான்கு** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

* **முதலாம்** வினாவுக்கு **20** புள்ளிகளும் ஏனைய எல்லா வினாக்களுக்கும் **10** புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

**1.** தொலைபேசி கண்டுபிடிக்கப்பட்டதற்குப் பின்னர் நடைபெற்ற தொழில்நுட்ப முன்னேற்றமானது தொடர்பாடல் களத்தில் புரட்சிகரமானதொரு மாற்றத்தை ஏற்படுத்தியது.

(i) தொலைபேசியைக் கண்டுபிடித்தவர் யார்?

(ii) ஆரம்ப காலகட்டத்தில் எந்த வகைத் தொடர்பாடலுக்காகத் தொலைபேசி பயன்படுத்தப்பட்டது?

(iii) தொலைபேசி வீடியோ அழைப்பில், பெறுநரின் தோற்றத்தை ஒருவரால் காணமுடியும். இந்தச் சூழலில் பயன்படக் கூடுமான **இரண்டு** வாய்மொழி சாராத் தொடர்பாடல் முறைகளைப் பெயரிடுக.

(iv) தொலைபேசி வழியாக மாநாட்டு அழைப்பு (conference call) மேற்கொள்ளப்படும்போது எவ்வகைத் தொடர்பாடல் பயன்படுத்தப்படுகின்றது?

(v) தொலைபேசி பயன்படுத்த **முடியாத** பிரதான தொடர்பாடல் வகை எது?

(vi) செல்பேசியைப் பயன்படுத்தும்போது பின்பற்றவேண்டிய **இரண்டு** ஒழுக்கநெறிகளைக் குறிப்பிடுக.

(vii) திறன்பேசியொன்றின் ஊடாக இணையத்தை நீங்கள் அணுகமுடியும். தொடரிணை வழியே நீங்கள் அணுகமுடியுமான **இரண்டு** சமூக ஊடகங்களைப் பெயரிடுக.

(viii) இணையத் தொடர்பைக் கொண்ட திறன்பேசி வழியாக மின்னஞ்சல் (email) வசதியை நீங்கள் பெற்றுக்கொள்ள முடியும். இன்னுமொரு தரப்புக்கு மின்னஞ்சல் அனுப்பும்போது, அந்தத் தரப்பின் பிரதான அம்சம் எதுபற்றி நீங்கள் அவசியம் அறிந்திருக்க வேண்டும்?

(ix) இணையத்தில் வேறுபட்ட வகைத் தகவல்களைத் தேடுவதற்குப் பயன்படக்கூடுமான தேடற்பொறியொன்றைப் (search engine) பெயரிடுக.

(x) இணையத்தினூடாக நபரொருவர் 'இணைந்த ஊடகம் / ஊடகக் குவிகை'ச் சூழலொன்றின் அனுபவத்தைப் பெறமுடியும். இணைந்த ஊடகம் / ஊடகக் குவிகை என்றால் என்ன?

**2.** (i) இலங்கையில் முதலாவதாக வெளியிடப்பட்ட தமிழ் செய்திப்பத்திரிகை எது?

(ii) அளவின் அடிப்படையில் செய்திப்பத்திரிகைகளின் **இரண்டு** பிரதான வகைகளைப் பெயரிடுக.

(iii) புகைப்படங்கள் வேறுபட்ட தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. பின்வரும் புகைப்பட வகைகளைச் சுருக்கமாக விபரிக்குக.

(அ) அறிக்கையிடலுக்கான புகைப்படங்கள்

(ஆ) செய்திப் புகைப்படங்கள்

(இ) படைப்பாக்கப் புகைப்படங்கள்

(iv) செய்திப்பத்திரிகை நிறுவனங்களுடன் தொடர்புடைய பின்வரும் ஊடகப் பணியாளர்களின் பணிகளைத் தனித்தனியாகக் கலந்துரையாடுக.

(அ) பதவிநிலை நிருபர்கள் அல்லது அலுவலக நிருபர்கள்

(ஆ) மாகாண நிருபர்கள்

[பக். 7 ஐப் பார்க்க

**3.** (i) அன்றாடத் தொடர்பாடலில் பயன்படும் **இரண்டு** உடலியல் சார்ந்த அம்சங்களைப் பெயரிடுக.

(ii) ஹரோல்ட் டீ லாஸ்வெல்லினால் வழங்கப்பட்ட தொடர்பாடல் வரைவிலக்கணத்தை எழுதுக.

(iii) அலுவலகத் தொடர்பாடல் கருவியாக தபால் முத்திரையிடல் இயந்திரம் பயன்படுத்தப்படுவதுடன் தொடர்புடைய **மூன்று** அம்சங்களைச் சுருக்கமாக விபரிக்குக.

(iv) செய்திப்பத்திரிகை நிறுவனமொன்றில் காணப்படக் கூடிய பின்வரும் பிரிவுகளின் செயற்பாடுகளுடன் தொடர்புடைய **இரண்டு** அம்சங்களை ஒவ்வொன்றுக்குமாக விபரிக்குக.

(அ) செய்திப்பிரிவு (news section)

(ஆ) சிறப்பு அம்சப் பிரிவு (feature section)

**4.** (i) ஆசியாவில் முதலாவது வானொலி ஒலிபரப்புச் சேவையை ஆரம்பித்த நாடு எது?

(ii) உரிமையாண்மையுடன் தொடர்புடையதான அரசாங்கத்தின் பங்களிப்புடன் இயங்கும் **இரண்டு** உள்ளூர் வானொலி நிறுவனங்களைப் பெயரிடுக.

(iii) வானொலி ஊடகத்தினைப் பயன்படுத்துவதன் ஊடாக சிறுவர்கள் பெற்றுக்கொள்ள முடியுமான **மூன்று** கற்றல் வெளிகளைச் சுருக்கமாக விபரிக்குக.

(iv) போல் டீ மெசுனியர் முன்வைத்த **நான்கு** அம்சங்களின் முக்கியத்துவத்தை வானொலிச் செய்தி அறிக்கையிடலுடன் தொடர்புடையதாகத் தனித்தனியே விளக்குக.

**5.** பெறுநர்களுக்குப் படைப்பாக்கச் செய்திகளை அனுப்பும்போது வெகுசன ஊடகங்கள் ஒழுக்கநெறிகளின்பால் அவசியம் கவனஞ்செலுத்த வேண்டும்.

(i) படைப்பாக்கமொன்றில் காணக்கிடைக்கக் கூடிய **இரண்டு** பண்புகளை எழுதுக.

(ii) இலங்கையில் வெகுசன ஊடகப் பயன்பாட்டுடன் தொடர்புடைய **இரண்டு** ஒழுக்கநெறிக் கோவைகளைப் பெயரிடுக.

(iii) தொலைக்காட்சி ஊடகத்தின் **மூன்று** இயல்புகளைச் சுருக்கமாக விபரிக்குக.

(iv) 'தொலைக்காட்சி ஊடகத்திற்கும் பெறுநருக்கும் இடையிலான பரஸ்பரச் செல்வாக்கு' பற்றி பின்வரும் அம்சங்களின் பேரில் பாடசாலைச் சுவர்ப் பத்திரிகைக்கான கட்டுரையொன்றைத் தயாரிக்குக.

(அ) தொலைக்காட்சி பெறுநரின் நடத்தையை மாற்றுகிறது.

(ஆ) தொலைக்காட்சி அன்றாட நிகழ்ச்சிநிரலைத் தயாரிக்கிறது.

**6.** தொலைக்காட்சி நாடகமொன்றின் வெளியீட்டு நிகழ்வில் நடிகர்களின் அறிமுகம் கவருந்தன்மையானதாக இருந்தது.

(i) பிரதான நடிகரைவிட தொலைக்காட்சி நாடகத்தின் பிரதான நடிகையின் சரும நிறம் கருமையானதாக இருந்தமை நிகழ்வில் பொதுவாகப் பேசப்பட்டது. எந்த எண்ணக்கருவின் கீழ் இது விபரிக்கப்பட முடியும்?

(ii) மேற்குறித்த நிகழ்வில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் குறைந்த செய்திப் பெறுமதி கொண்டவையாக இருந்தன. அதற்கான **இரண்டு** காரணங்களை எடுத்துரைக்குக.

(iii) தொலைக்காட்சி நாடகமொன்றில் நிலைத்த புகைப்படங்கள் பயன்படும் **மூன்று** சந்தர்ப்பங்களைச் சுருக்கமாக விபரிக்குக.

(iv) 'அரசாங்கத் தொலைக்காட்சி ஊடக நிறுவனங்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையேயான உறவு' பற்றி பின்வரும் அம்சங்களின் பேரில் கட்டுரையொன்றைத் தயாரிக்குக.

(அ) அரசாங்கத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துதல்

[ Downloaded from Past Papers Wiki - Most Extensive Wikipedia of Past Papers! ]

7. ஊடக விமர்சனத்தில் செய்தியொன்றைத் தனித்து நோக்குவது நியாயமற்றது.

(i) செய்தியொன்றால் முன்வைக்கப்படும் சிந்தனையைத் தீர்மானிக்கும் அம்சமொன்றைப் பெயரிடுக.

(ii) விமர்சனத்திறனுள்ள பெறுநர் ஒருவர் அவசியம் கொண்டிருக்க வேண்டிய **இரண்டு** தேர்ச்சிகளை எடுத்துரைக்குக.

(iii) வானொலி ஊடகத்திற்குப் பிரதியை எழுதும்போது அவசியம் நிறைவேற்றப்பட வேண்டிய **மூன்று** நிபந்தனைகளை விபரிக்குக.

(iv) "சமூக ஊடகங்களைப் புரிந்துணர்வுடன் பயன்படுத்துவோம்" என்பது பற்றி பாடசாலைக் காலைக் கூட்டத்தில் ஆற்றவேண்டிய உரையொன்றின் மாதிரியை **நான்கு** அம்சங்களின் பேரில் தயாரிக்குக.

* * *

PAST PAPERS WIKI

WWW.PastPapers.WiKi

[ Downloaded from Past Papers Wiki - Most Extensive Wikipedia of Past Papers! ]

LOL.lk
BookStore

# විභාග ඉලක්ක
## පහසුවෙන් ජයගන්න

ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න





කෙටි සටහන්|පසුගිය ප්‍රශ්න පත්‍ර|වැඩ පොත් සඟරා|O/L ප්‍රශ්න පත්‍ර|
A/L ප්‍රශ්න පත්‍ර|අනුමාන ප්‍රශ්න පත්‍ර|අතිරේක කියවීම් පොත්|
School Book ගුරු අතපොත්

PADANAMA PUBLICATION
pesuru Prakashana Private Ltd.
Akura Pilot
සමනල දැනුම
T
සුහද

පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා

**සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට**

**www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න**